பக்கங்கள் - 19

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 12 புதன்கிழமை 29.10.2025 | அதிர்வு 90

## “சகல தடைகளும் நீக்கப்பட்ட பின்பே மாகாணத் தேர்தல்”

“மாகாண சபைத் தேர் தலை நடத்துவதில் ஏராள மான தடைகள் காணப்படுகின்றன. அந்தத் தடைகள் அனைத்தும் நீக்கப்பட்ட பின்னரே தேர்தல் 04▶

# கிளிநொச்சியில் காணாமல்போன இளைஞர் 9 நாள்களின் பின் காட்டுக்குள் சடலமாக மீட்பு!

### வெளிநாடு செல்ல இருந்த நிலையில் சோகம்
### பொலிஸார் பல கோணங்களில் விசாரணை



கிளிநொச்சியில் காணாமல்போன இளைஞர் ஒருவர் காட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யூனியன் குளத்தைச் சேர்ந்த அப்சரன் (வயது 26) எனும் இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞர் கடந்த 24ஆம் திகதி வெளிநாட்டுக்குப் பயண 04▶



# மிகவும் பலவீனமான எதிர்க்கட்சியே இன்று இலங்கையில் உண்டு

### இலண்டனில் இப்படி வறுத்தெடுத்த நீதி அமைச்சர்

“இலங்கையில் சட்டவாட்சியை உறுதிப்படுத்திப் போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது எதிர்க்கட்சியினர் குறுகிய அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்திச் செயற்படுகின்றனர். மிகவும் பலவீனமான எதிர்க்கட்சியே இன்று இலங்கையில் உள்ளது.”

- இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பிரித்தானியாவுக்கு விஜயம் சென்ற அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இலண்டன் நகரில் தேசிய மக் 04▶

# என்.பி.பி. அரசாங்கத்தை ஐந்து வருடங்களுக்கு ஆளவிடக்கூடாது என்பதே மக்களின் கோரிக்கை

### முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகின்றார்

தேசிய மக்கள் சக்தி அரசு இந்த நாட்டை ஐந்து வருடங்களுக்கு ஆளக்கூடாது எனவும், அரசை விரட்டி அடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நாட்டு மக்கள் கோரி வருகின்றனர் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதவாது:-

“இந்த அரசுக்கு கடந்த ஒரு வருட காலப்பகுதியில் நாம் எவ்வித 04▶






முன்னைய அரசுகளின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடி, முறைகேடுகள் குறித்து விசாரணை செய்து, தவறிழைத்தோரைச் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை வாங்கிக் கொடுப்போம் என்று தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு சூளுரைத்தாலும் அது செயலளவில் குறிப்பிடத்தக்க வேகத்தில் முன் நகர்வதாகத் தெரியவில்லை.

உப்புச் சப்பற்ற விவகாரங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்தமை போன்ற சில்லெடுப்புகளில்தான் இந்த அரசின் போக்குத் தொடர்கின்றது.

ஆனாலும் ஊழல், மோசடி, முறைகேடு விவகாரம் தொடர்பில் சுயாதீனமாக முன்னாள் - இந்நாள் எம்பிக்கள் மூவர் முன்னெடுத்த சட்ட நடவடிக்கை இந்த விடயத்தில் காத்திரமாக முன்நகரக் கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் 03▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

### யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட

# 11 மாவட்டங்களில் டெங்கு அபாயம்!

### வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர எச்சரிக்கை

"பருவகால மழை வீழ்ச்சியால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. தற்போது 11 மாவட்டங்கள் டெங்கு அபாயம் மிக்க பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, கண்டி, மட்டக்களப்பு, குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயமுள்ள பகுதிகளாகும்."

– இவ்வாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்தார்.

டெங்கு பரவல் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை சுகாதார அமைச்சில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இவ்வருடம் ஜனவரி முதல் இது வரையான காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் 41 ஆயிரத்து 324 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்குக் காய்ச்சலால் இதுவரை 22 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

நுளம்புப் பெருக்கத்தின் அதிகரிப்போடு தற்போது 11 மாவட்டங்கள் டெங்கு அபாயம் மிக்க பகுதிகளாக இனங்




காணப்பட்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, கண்டி, மட்டக்களப்பு, குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்கள் மேற்படி டெங்கு அபாயமுள்ள பகுதிகளாகும்.

பருவகால மழை வீழ்ச்சியைத் தொடர்ந்து 22 மாவட்டகளில் நுளம்பு பரவல் தீவிரமடைந்துள்ளது. தொடரும் மழையுடன் கூடிய காலநிலை நுளம்புப் பரவலுக்குச் சாதகமாக அமைந்துள்ளதுடன், ஏனைய நாட்களுடன் ஒப்பிடுகையில் இந்தக் காலப் பகுதியில் டெங்கு நுளம்பினங்கள் துரிதமாக பரவி வருவதாக குடம்பியல் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது. ஆகையால் பொதுமக்கள் டெங்கு அபாயத்தைக் கருத்திற்கொண்டு சுற்றுப்புற சூழலை தூய்மையாக வைத்திருப்பது அவசியம்.

மனிதர்கள் நடமாடும் மற்றும் வசிக்கும் பகுதிகளில் டெங்கு நுளம்புகள் அதிகளவில் பரவுகின்றன. அந்தவகையில் வீட்டு சூழல், வழிப்பாட்டுத் தளங்கள், பாடசாலை வளாகம், வர்த்தக நிலையங்கள், கைவிடப்பட்ட காணிகள், கட்டட நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படும் இடங்களில் மற்றும் தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதிகளில் நுளம்பு குடம்பிகள் தொடர்பில் அண்மையில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 6 இலட்சத்து 50 ஆயிரத்து 638 இடங்களை அதிகாரிகள் பரிசோதித்திருந்தனர்.

இந்தச் சோதனையில் பாடசாலை சூழலிலேயே அதிக அளவில் டெங்கு நுளம்புகள் பரவியிருந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளது. பாடசாலைச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது அவசியம்.

கடந்த வாரத்தில் இருந்து இனங்காணப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்த காய்ச்சல் மற்றும் தலைவலி, உடல் வலி, கடுமையான வயிற்று வலி போன்ற அறிகுறிகள் ஏதேனும் தென்படும் பட்சத்தில் உடனடியாக வைத்தியசாலையை நாடுவது அவசியம்." – என்றார்.

# எல்லவில் சுற்றுலாப் பயணி திடீர் மாரடைப்பாலே மரணம்

### பிரேத பரிசோதனையில் கண்டறிவு

எல்ல மலைப் பகுதியில் நடைபயணம் செய்து தனது மகளின் 34 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய பிரித்தானிய பிரஜையின் மரணம் திடீர் மாரடைப்பால் ஏற்பட்டது என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

பிரித்தானியாவின் ஓக்பாத்தைச் சேர்ந்த 63 வயதான பிரட் மக்லீன் என்ற பிரித்தானிய பிரஜை, தனது மகளின் பிறந்தநாளைக் கொண்டாடிய வேளை எல்லவில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

அவர் கடந்த 16 ஆம் திகதி தனது மகள் நடாலி அன்னேவுடன் நாட்டுக்கு வருகை தந்து வெலிகமவில் தங்கியிருந்தார். பின்னர் இருவரும் 23 ஆம் திகதி எல்லவுக்குச் சென்று ஹோட்டலில் தங்கியுள்ளனர்.

இந்நிலையிலேயே, அவர் திடீரென உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தைத்



தொடர்ந்து, பண்டாரவளை நீதிவான் கெமுனு சந்திரசேகர, நீதிவான் விசாரணைக்கு உத்தரவிட்டார். மேலும் உடலை பிரேத பரிசோதனைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பதுளை போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில் மரணத்துக்கான காரணம் திடீர் மாரடைப்பு என்பதை உறுதிப்படுத்தியது.

# அனைத்து எதிர்க்கட்சி எம்.பிக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

"பொலிஸ்மா அதிபரின் அறிவிப்பு மூலம் ஜகத் விதானவின் குடிமகன் என்ற முறையிலான சிறப்புரிமைகளும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலான அவரது சிறப்புரிமைகளும் மீறப்பட்டுள்ளன. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து பொலிஸ்மா அதிபர் கவனம் செலுத்தி, சகல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றேன்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விசேட அறிவிப்பை விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-


"தற்போதைய பொலிஸ்மா அதிபரின் சில நடவடிக்கைகள் பெரிதும் அரசியல் மயமாகிக் காணப்படுகின்றன. சில விசாரணைகள் அரசியல் மற்றும் ஊடகக் காட்சிப்படுத்தல்களாக மாற்றப்பட்டுள்ளன.

அரசின் பிரசாரக் கட்டமைப்பின் ஒரு தரப்பாகப் பொலிஸ்மா அதிபர் மாறிவிட்டார் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்கள் மூலம் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

அச்சுறுத்தல்கள் தொடர்பாக முறைப்பாட்டாளராகச் செயற்படும் போது அவரைக் குற்றவாளியாக அழைப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். பாதுகாப்பு வழங்குவது அரசியல் மயமாக்கப்பட்டு விட்டதா அல்லது பாதுகாப்பை வழங்கும் பெரும் பொறுப்பை அரசியல்வாதிகள் தங்கள் கைகளில் எடுத்துள்ளனரா என்று கேள்வி எழுப்புகின்றோம்.

ஜகத் விதானவின் பாதுகாப்பு தொடர்பில் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றோம். அரசு, பொலிஸ்மா அதிபர், சட்டம் மற்றும் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர் உள்ளிட்ட சகலரும் ஜகத் விதானவின் பாதுகாப்பை உறுதி செய்து, அவரது உயிரைப் பாதுகாக்க வேண்டும்.

220 இலட்சம் குடிமக்களுக்குப் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு



ஜனாதிபதி தலைமையிலான அரசு பொறுப்பேற்க வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களினது பாதுகாப்பு தொடர்பில் அதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து பொலிஸ்மா அதிபர் கவனம் செலுத்தி, சகல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றேன்." - என்றுள்ளது.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க கூட வகையாகச் சிக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுவதாக சில வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம் பெற்ற ஈ-விஸா மோசடி குறித்து நேற்றும் இப்பதியில் சற்று விஸ்தாரணமாக வெளிப்படுத்தி இருந்தேன்.

உரிய கேள்விப் பத்திர நடைமுறைகள், ஒழுங்குகள் பின்பற்றப்படாமல், திடுதிப்பென இந்த ஈ-விஸா வழங்கும் அதிகாரம், அதிக கட்டணத்துடன் தனியார் நிறுவனம் ஒன்றுக்குத் தாரை வார்க்கப்பட்டது.

இது மோசடியான முறைமை என்று தெரிவித்து, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுத் தாக்கல் செய்தனர் என்பதை விவரித்து, அந்த வழக்கின் தொடர்ச்சியாக இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின்கட்டுப்பாட்டாளர்நாயகம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு அவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை பற்றியும் விவரித்திருந்தேன்.

இப்போது, அப்படி இடையில் அறிமுகப்படுத்தப்பட்ட அந்த குளறுபடி முறையால் ஏற்பட்ட இழப்புக் குறித்து கணக்காய்வு அறிக்கை வெளியே வந்திருக்கின்றது என்றும் -

2024 ஏப்ரல் 17ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் இரண்டாம் திகதி வரை மூன்றரை மாதங்களுக்கு மேல் இந்த முறைமை தொடந்தமையால் இலங்கை அரசாங்கம் 18 லட்சத்து 20 ஆயிரத்து 418 டொலர் (சுமார் 55 கோடி ரூபா) வருமானத்தை பெறும் வாய்ப்பை இழந்துள்ளது என்று கணக்காய்வுகள் தெரிவிக்கின்றன என்றும் - குறிப்பிட்டிருந்தேன்.

முறையற்ற விதத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட இந்த ஈ- விஸா நடைமுறையில் விஸாவுக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் டொலரில் அறவிடப்படும் தலா சுமார் 10,000 ரூபாவுக்கு சமனான தொகை நேரடியாக அரசுக்கு வராமல், அந்த சேவையை வழங்கிய வெளிநாட்டு நிறுவனத்தின் வெளிநாட்டு வங்கு கணக்குக்கு சென்றடைய கூடியதாக இந்த ஒழுங்குமுறை செய்யப்பட்டிருந்தது. இதனால் அந்தக் காலத்தில் விஸாவுக்காக அறவிடப்பட்ட 55 கோடி ரூபாவும் இப்போது எங்கே என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. அந்த நிதி முழுமையாக சுவாஹா பண்ணப்பட்டு விட்டது.

சுமந்திரன் உட்பட மூவராலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்னும் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது. இப்படி விஸாவுக்காக டொலரில் அறவிடும் பணத்தை அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத தனியார் நிறுவனம் ஒன்றின் வெளிநாட்டு வங்கிக் கணக்கு ஒன்றுக்கு அனுப்புவதற்கு அனுமதி அளித்தமை மிகப் பெரிய மோசடி என்று அந்த மனுக்களில் அப்போதே விரிவாகக் குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

கணக்காய்வாளர்களின் அறிக்கையில் அது இப்போது நிரூபணமாகி இருக்கிறது.

இந்தப் பின்புலத்தில் சுமந்திரன் மற்றும் இருவரும் தாக்கல் செய்த வழக்கு வரும் இருபதாம் திகதி மீண்டும் உயர்நீதிமன்றுக்கு வருகின்றது.

உரிய கேள்விப் பத்திர ஒழுங்குகள் பின்பற்றப்படாமல், இந்த ஈ-விஸா முறைமை திடுதிப்பென நடைமுறைப் படுத்தப்பட்ட சமயம் குடிவரவு, குடியகல்வு விடயங்களும் உட்பட்ட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சராக இருந்தவர் ரிரான் அலஸ். அதே சமயம் அச்சமயம் நிதியமைச்சராக இருந்தவர் அப்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க.

இந்த இருவரும்தான் அமைச்சரவையில் இந்த ஈ-விஸா முறைமை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான பத்திரங்களை சமர்ப்பித்து வழி நடத்தியவர்கள் என்ற முறையில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்.

சுமந்திரன் - ஹக்கீம் - சம்பிக்க ரணவக்க ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மூல மனுக்கள் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் போது இந்த ஈ-விஸா முறைமையை நடைமுறைப்படுத்தியமை தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் மட்டுமல்லாமல், அதற்கான அரசு அனுமதியை வழங்குவதற்கு முன்னின்று செயல்பட்ட பொறுப்புக்காக ரிரான் அலஸ் மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் கூட பதில் கூற வேண்டிய நெருக்கடி உருவாகும் என்று சில சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அவற்றுக்குள் அதிகமாக உள்ளிறங்கி ஆராயவோ விவரிக்கவோ நான் விரும்பவில்லை. அது பொருத்த மற்றது. ஆனாலும் வெளிநாட்டுப் பயணம் தொடர்பான கைது நடவடிக்கையை விட, இந்த விவகாரம் உயர் நீதிமன்றத்தில் இருப்பதால் ரணில் தரப்புக்கு மோசமான நெருக்கடியை தரக்கூடியதாக அது மாறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதை மட்டும் கோடி காட்டுகிறேன்.

நீதிமன்ற விசாரணையின் பின்னர் நிலைமை எப்படி மாறுகின்றது என்பதைப் பார்ப்போம்.

# இலங்கையின் சிறைச்சாலைகளில் உள்ள இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலையில் போதைப் பொருள் தடுப்பு தொடர்பாகப் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் 36 சிறைச்சாலைகள் உள்ளன. அவற்றில் அடைக்கக்கூடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 10,500 ஆகும்.

ஆனால் தற்போது கிட்டத்தட்ட 36,000 பேர் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.





## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படும்."

– இவ்வாறு பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அரசு அக்கறையுடன் உள்ளது. ஆனால், அதற்கு முன்னர் பல விடயங்களுக்குத் தீர்வு காண வேண்டிய தேவையுள்ளது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்ட பின்னரே தேர்தலை நடத்த முடியும். எனவே, அது தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளதை முன்னிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். மக்களால் நிராகரிக்கப்பட்ட அனைவரையும் மீண்டும் தோற்கடிக்கக்கூடிய வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் பொய்ப் பரப்புரைகளை இனியும் நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை. எனவே, அவர்கள் மீண்டும் மீண்டும் தோற்கடிக்கப்படுவது உறுதி." – என்றார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக இருந்த நிலையில் ஐந்து தினங்களுக்கு முன்னர் – கடந்த 19ஆம் திகதி முதல் காணாமல்போனார்.

காணாமல்போன மகனை பெற்றோர்த் தேடி வந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் உறவினர்களும் இளைஞரைத் தேடி வந்தனர்.

இந்தநிலையில் இளைஞரின் வீட்டில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள காட்டினுள் மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று அவர் கண்டுபிடிக்கப்பட்டார்.

இளைஞரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## என்.பி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையூறையும் ஏற்படுத்தவில்லை. நாட்டை மேம்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டது. வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு எவ்வித தடையையும் ஏற்படுத்தவில்லை. இந்த நாட்டுக்கு வரவேண்டாம் என வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்தவில்லை.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே அரசுக்கு அவகாசம் வழங்கப்பட்டது. எனினும், உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

இந்த அரசு ஐந்து வருடங்களுக்கு பயணிப்பதற்கு இடமளிப்பதற்கு நாம் தயார். ஆனால், இந்த அரசை வீட்டுக்கு அனுப்புமாறு அரசுக்கு வாக்களித்த மக்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இது பற்றி எம்மிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஏன் மௌனம் காக்கின்றீர்கள்? நாட்டைச் சீரழிக்க இடமளிக்க வேண்டாம் என மக்கள் எம்மிடம் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்." – என்றார்.

## மிகவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சக்தியின் ஆதரவாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம். நிறைவடைந்த ஒரு வருட காலத்தில் பொருளாதார மீட்சிக்குரிய திட்டங்களை சகல அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாகச் செயற்படுத்தியுள்ளோம்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதுடன் நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துவது அரசின் பிரதான எதிர்பார்ப்பாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சட்டத்தை மதிக்கும் சிறந்த சமூகம் ஒன்று தோற்றம் பெறும். இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது எதிர்க்கட்சியினர் அதற்குத் தடையாகச் செயற்படுகின்றனர். பாதுகாப்பு சார்ந்த விடயங்களைப் பலவீனப்படுத்தும் வகையில் அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். மிகவும் பலவீனமான எதிர்க்கட்சியே இன்று இலங்கையில் உள்ளது.

பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில் இருந்து அரசு ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை." – என்றார்.

# ரயிலில் மோதி யானை சாவு!



குருநாகல், கல்கமுவ பகுதியில் உள்ள ரயில் பாதையில் ரயிலில் மோதி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு ரயில் சேவை தாமதமாகியுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

### கட்டுநாயக்க விமான நிலையத்தில்

## சுமார் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் சிக்கிய இளைஞர்!

இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியசை சேர்ந்த 29 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இளைஞர் தாய்லாந்தின் பேங்கொக் நகரத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்துள்ளார்.

பின்னர் அவர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரான இளைஞர் கொண்டு வந்த பயணப்பொதிகளில் மிகவும் சூட்சுமமாக மறைத்து



வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 523 கிராம் குஷ் போதைப்பொருள் விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## பெற்ற தாயைக் கோடரியால் தாக்கி கொலை செய்த அங்கவீனமுற்ற மகன்

வீடொன்றுக்குள் பெண் ஒருவர் கோடரியால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் அனுராதபுரம், மதவாச்சியில் இடம்பெற்றுள்ளது.

மதவாச்சி, இசின்பெஸ்ஸகல பகுதியை வசிப்பிடமாக கொண்ட 81 வயதுடைய மூதாட்டியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் அங்கவீனமுற்ற மகனுடன் வீட்டில் வசித்து வந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு அந்த மகன்,



தாயைக் கோடரியால் தலையில் தாக்கிக் கொலையைச் செய்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

கொலைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில் சந்தேகநபரை மதவாச்சி குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆரம்பகட்ட நீதிவான் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ளுவதற்காக வேண்டி சடலம் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியல் நடுக்கம்

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராக சிறிலங்கா பொதுஜன பெரமுன, இலங்கை சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் பிற கட்சிகளை உள்ளடக்கிய கூட்டு எதிர்க் கட்சிகள் ஒரு பொதுவான வேலைத் திட்டத்திற்காக ஒன்றிணைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இவற்றுடன் சேர்ந்து செயற்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

இந்த ஐக்கியம் குறித்துக் கருத்து வெளியிட்ட தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க “எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவது நல்லது. ஏனெனில் மக்கள் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டவர்களை ஒரேடியாகத் தோற்கடிக்க முடியும்” - என்று அரசியல் கிண்டல் செய்திருக்கின்றார்.

“எதிர்க்கட்சி கூட்டணி குறித்து எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை. அவர்கள் ஒன்றிணைவது நல்லது. பின்னர், மக்கள் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபட்டவர்களை ஒரே குழுவாகத் தோற்கடிக்க முடியும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து கருத்து தெரிவித்த அவர், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நிறைய சட்டத் தடைகள் உள்ளன என்றும், அந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து வைத்த பின்னரே அதைத் தொடங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க சில அரசியல் நிதர்சனங்களை - யதார்த்தங்களை - புறமொதுக்கி அரசியல் நையாண்டி செய்வது போல நடிக்கின்றார் என்று தான் தோன்றுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மூன்று பிரதான எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் தனித்தனியாகப் பிரிந்து நின்றமையால் தான் அவர்களின் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கவினால் வெற்றியீட்ட முடிந்தது. அந்த வெற்றி கூட வழமைக்கே மாறாக இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையின் பின்னர்தான் சாத்தியமாயிற்று. இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையின் பின்னரும் கூட - அரைவாசி - ஐம்பது - வீத வாக்குகளை அவரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அவர் ஜனாதிபதியானதும், அதனால் கிடைத்த அரசியல் செல்வாக்கினாலும் திடீர் அரசியல் அலையினாலும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி பெருவெற்றி ஈட்டிய போதிலும், குறுகிய காலத்திலேயே அடுத்து வந்த உள்ளூராட்சித் தேர்தலில் அதற்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

எதிர் அணியில் இருந்த போது மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று துள்ளிக் குதித்த அவரது கட்சி, இப்போது ஆட்சியதிகாரத்துக்கு வந்ததும், அந்தத் தேர்தலை நடத்துவதற்கு புதிதாக சட்டத்தடைகள் இருக்கின்றன என்று கதை விடுகின்றது.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளால் நிலைகுலைந்து போன ஆளும் தரப்பினர், இப்போது எதிரணிகள் ஒன்றுபடுவது கண்டு இன்னும் குழம்பிப் போய், அதை வெளிக்காட்டாமல் சமாளிப்பதற்காகச் சகட்டுமேனிக்கு அரசியல்கிண்டல்பேசுகின்றனர். அவ்வளவுதான்!





# வெலிகம தவிசாளர் லசந்த கொலை தொடர்பான மேலதிக விசாரணைகள் சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு

வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்கிரமசேகர கொலை சம்பவத்தின் மேலதிக விசாரணைகள் குற்றப் புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவிற்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெலிகம பிரதேச சபை தவிசாளர் 15 லட்சம் ரூபா ஒப்பந்தத்திற்காக கொலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரி, அவரது மனைவி, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் அவர்களுக்கு அடைக்கலம் வழங்கிய நபர் ஆகிய சந்தேகநபர்கள் நால்வரும் 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர கடந்த 22ஆம் திகதி பிரதேச சபைக்குள் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

# தேசிய புலனாய்வு சேவைக்கு தலைமை அதிகாரி நியமனம்

தேசிய புலனாய்வு சேவையின் புதிய தலைமையதிகாரியாக மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) நலிந்த நியங்கொட நியமிக்கப்பட்டுள்ளார்.





தேசிய புலனாய்வு சேவையின் தலைமையதிகாரியாக கடமையாற்றி வந்த மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய நேற்று முன்தினம் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். 60 வயது பூர்த்தியானதன் காரணமாகவே அவர் ஓய்வு பெற்றார் என பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஊடாக தெரிவித்துள்ளது.

# கலால்வரி செலுத்தாதவர்களின் அனுமதிகளை இடைநிறுத்த புதிய வர்த்தமானி வெளியானது

மதுபான உற்பத்திக்கான வரி செலுத்தும் கால எல்லை மற்றும் வரியை அறவிடுவதற்கான ஒழுங்குமுறைகளை திருத்தி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால்நேற்று முதல் அமுலாகும் வகையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

கலால் கட்டளைச் சட்டப்பிரிவு 22 இன் கீழ் ஒவ்வொரு அனுமதிப்பத்திர


The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

EXTRAORDINARY

உரிமையாளரும் உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் வரியை செலுத்த வேண்டும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிய திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் வரி அல்லது கட்டணத்தை முழுமையாக செலுத்தத் தவறிய அனுமதிப்பத்திர உரிமையாளரின் போத்தல் தயாரிப்பிற்கான அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக உரிய திகதியிலிருந்து 90 நாள்களுக்கு மேல் செலுத்த வேண்டிய வரி, கட்டணம் முழுமையாக செலுத்தப்படாவிட்டால் அந்த உரிமையாளரின் அனைத்து அனுமதிப்பத்திரங்களும் இடைநிறுத்தப்படும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!




இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையானது நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் இன்று புதன்கிழமை மாலை 4 மணி வரை அமுலில் இருக்கும் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, காலி, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சிநிறுவனம்மேலும்குறிப்பிட்டுள்ளது.

# விளையாட்டுத் துப்பாக்கியுடன் நீதிமன்றம் சென்ற பெண் கைது!

அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்துக்குள் விளையாட்டுத் துப்பாக்கியுடன் சென்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண், அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு விசாரணை ஒன்றுக்காக நேற்றுமுன்தினம் சென்றிருந்த போது நீதிமன்ற பொலிஸாரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.



இதன்போது அந்தப் பெண்ணின் பையில் இருந்து விளையாட்டுத் துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டு அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத் துப்பாக்கியுடன் நீதிமன்றத்துக்குள் சென்றமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிப்போர் ஆசனப் பட்டிகளை அணிவது கட்டாயமானது

## வழிகாட்டுதல்களை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அனுமதி

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்அனைத்துப்பயணிகளுக்கும் ஆசனப் பட்டிகள் அணிவதைக் கட்டாயமாக்குவது தொடர்பாக, மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிகரித்துள்ள விபத்துக்களால் ஏற்படும் மரணங்கள் மற்றும் பாரிய காயங்களைக் குறைக்கும் நோக்குடன், 2455/29 மற்றும் 2025.09.25 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மோட்டார் வாகன சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க மோட்டார் வாகன ஒழுங்கு விதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இதனால், அதிவேகநெடுஞ்சாலையில் செல்லும் வாகனங்களிலுள்ள அனைத்து பயணிகளும் ஆசனப் பட்டிகளை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி பதில்கடமை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# மைக்கேல் கோர்ஸ் இலங்கைக்கு ஆதரவு




உணவுத் திட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக, உலகளாவிய ஆடை வடிவமைப்பு நிறுவனமான மைக்கேல் கோர்ஸ் , ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்திற்கு 2.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு ஆதரவாக வழங்கியுள்ளது.

இலங்கையின் தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தை வலுப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

மைக்கேல் கோர்ஸின் நீண்டகால றுயவஉா உரபெநசளுவழிஉயஅியபைெ' பிரசாரத்தின் மூலம் இந்த நிதி, உலக உணவுத் திட்டத்தின் 'வீட்டுப் பயிர் பாடசாலை உணவுத் திட்டத்தை' விரிவுபடுத்துவதற்குப் பங்களிக்கிறது.

இந்த நிதியுதவியின் மூலம், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 250,000 சிறுவர்கள் தினசரி சத்தான உணவைப் பெறுவார்கள்.

மேலும், 1,500 உள்ளூர் விவசாயிகள் மற்றும் உணவு வழங்குநர்கள் இத்திட்டத்திற்குப் புதிய மற்றும் உள்ளூரில் விளைந்த விளைபொருட்களை வழங்குவதன் மூலம் பயனடைவார்கள்.

இத்திட்டம் தற்போதுள்ள 8 மாவட்டங்களிலிருந்து 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது.

30 பாடசாலைகள் சூரிய சக்தியில் இயங்கும் சமையலறைகளைப் பெறுவதன் மூலம் உள்கட்டமைப்பு மேம்பாட்டைப் பெறும்.

இது செலவுகளைக் குறைப்பதுடன், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்து, நிலைத்தன்மையை ஊக்குவிக்கும்.

உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான நாட்டின் பணிப்பாளரான பிலிப் வார்ட், "இலங்கையின் பாடசாலை உணவுத் திட்டத்தை மேம்படுத்துவதில் மைக்கேல் கோர்ஸின் அர்ப்பணிப்பு மற்றும் கூட்டுப் பங்களிப்பை நாங்கள் ஆழமாகப் பாராட்டுகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

பசியுடன் போராடும் பகுதிகளில் உள்ள சிறுவர்களுக்கு பாடசாலையில் உணவளிக்க வேண்டும் என்ற நோக்குடன் 2013 ஆம் ஆண்டு முதல் மைக்கேல் கோர்ஸ் உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில், உலகளவில் 35 மில்லியனுக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு உணவுகளை வழங்க இந்த நிறுவனம் உதவியுள்ளது.

# நாட்டில் 380 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு; 4 மாதங்களாக குருதி பரிசோதனை இல்லை

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு



இலங்கையின் சுகாதாரத் துறை பாரிய நெருக்கடியில் உள்ளதாகவும், நாட்டில் அத்தியாவசிய மருந்துகள் உட்பட 380 இற்கும் மேற்பட்ட மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது எனவும் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த நான்கு மாதங்களாக தேசிய மருத்துவமனை உட்பட எந்தவொரு அரச மருத்துவமனையிலும் குருதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் காரணமாக, மக்கள் பணத்தைச் செலவழித்து தனியார் ஆய்வுகூடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதய சத்திரசிகிச்சை அலகுகளில் கூட, பைபாஸ் சத்திரசிகிச்சை போன்றவற்றுக்குத் தேவையான பொருள்களுக்கான பட்டியலை நோயாளிகளுக்கு வழங்கி, அவர்களை வெளியே பணம் செலவழிக்க வைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறையின் இந்த வீழ்ச்சியால், இலவச சுகாதாரத்துறை கேள்விக்குறியாகியுள்ளது எனவும் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

# அரச சேவைக்கு 8,547 பேரை ஆள்சேர்ப்பு செய்ய அனுமதி

அரச சேவையின் ஆட்சேர்ப்புச் செயல்முறையை மீளாய்வு செய்வதற்காகப் பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன் மூலம், பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளில் நிலவி வந்த 8,547 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்ய அந்தந்த நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளர் தலைமையிலான ஆட்சேர்ப்பு தொடர்பில் ஆராயும் குழு கடந்த 2 ஆம் திகதியன்று சமர்ப்பித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சின் கீழ் 5,198 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இந்த ஆட்சேர்ப்புகள் அரச சேவையின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளைக் கருத்தில் கொண்டு விரைவாக மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

**வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வலியுறுத்தல்**

"கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் மீது இறுக்கமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை. அதன் காரணமாகவே மீண்டும் மீண்டும் சட்ட விரோதமாக எல்லை தாண்டி வருகின்றனர். அதனை முற்று முழுதாக தடுத்த நிறுத்த அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் தம்பிராசா சந்திரதாஸ் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1980 காலப்பகுதியில் மீன்பிடித்துறையில் நாம் எழுச்சி பெற்றிருந்த நிலையில், போர் காரணமாக அந்த நிலை வீழ்ச்சி கண்டுள்ளது. கடல்வலயச் சட்டம் உள்ளிட்ட தடைகள் காரணமாக கடற்றொழில் மிகப்பெரும் பாதிப்புகளை சந்திக்கும் நிலை ஏற்பட்டது. இக்காலத்தில் இந்திய மீனவர்களே எமது கடலில் மீன்வளதை அள்ளிச்சென்றனர்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மற்றும் உள்ளூரில் தடைசெய்யப்பட்ட தொழில்களினால் எமது கடல் வளம் பாதிக்கப்படுவதுடன் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அதிகளவில் சுருக்குவலை, கணவாய் குழைகளை கடலில் போடுவது உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். அதனால் வடமராட்சி வடக்கு கடற்பரப்பை நம்பி இருக்கும் மீனவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. தான் தான் வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய மனப்பான்மையுடன் எம்மவர்கள் நடப்பதன் காரணமாகவே தடைசெய்யப்பட்ட தொழில்களுக்கு உடந்தையாக செயற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எதிர்கால சந்ததிக்கு எமது கடல் வளத்தை பாதுகாக்கும் அக்கறை இல்லாது போய்விட்டது.

இது விடயத்தில் ஆட்சிகள் மாறினாலும் அதிகாரிகளது மெத்தனப்போக்கு மாற்றமின்றியே தொடர்ந்து வருகின்றது.

கடற்றொழில் அமைச்சராக தமிழர்கள் வந்தபின்னரே வடக்கு மீனவர் சமூகம் பிளவுண்டுபோயுள்ளது. தமிழ் அமைச்சர்களாக முன்னர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் தற்போது சந்திரசேர் தரப்புகளின் அரசியல் ஆதிக்கம் சங்கங்கள் சமாசங்களுக்குள் ஊடுருவியதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் சார்ந்த அரசியல் ஆதாயங்களுக்காக மீனவர் சமுதாயத்தை பயன்படுத்தி வருகின்றனர். சங்கங்களில் பொறுப்புகளில் உள்ள பலர் மீனவ சமூதாயத்தின் நலன்களை கைவிட்டு சுயநல காரணங்களுக்காக இவ்வாறான தரப்புகளின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றனர். இதனால் சங்களை சமாசத்தினால் கட்டுப்படுத்தவோ வழிநடத்தவோ முடியாதுள்ளது.

தொடர்ச்சியாக கடற்றொழில் வருவாயேதும் இன்றி ஏமாற்றமாகி வருவதன் காரணமாக எமது இளைஞர் சமூகம் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றமை எதிர்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதே நிலை நீடித்தால் இன்னும் சில ஆண்டுகளில் எமது கடலிலே மீன்கள் காணமல் போகும் நிலை ஏற்படும்.

1983 இற்கு முன்னர் இந்திய மீனவர்கள் எமது கடலுக்குள் வந்ததில்லை. கடல்வலய தடைச்சட்டம் காரணமாகவே இந்திய மீனவர்கள் வந்து எமது கடல் வளத்தை சுரண்டிச்சென்றனர்.

கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் மீது இறுக்கமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை. அதன் காரணமாகவே மீண்டும் மீண்டும் சட்ட விரோதமாக எல்லை தாண்டி வருகின்றனர். அதனை முற்றுமுழுதாக தடுத்த நிறுத்த அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீனவர் சமூகத்தின் பிரச்சினைகளுக்காக நேர்மையாக குரல்கொடுத்து செயற்படுவதற்கு எமது பிரதிநிதிகளும் தயாராக இல்லை. தத்தமது அரசியல் தேவைகளுக்காக மீனவர் பிரச்சினையில் தலையிடுவதோடு சரி. நிலையான தீர்வுக்காக ஒருவரும் துணைநிற்பதும் இல்லை, குரல்கொடுப்பதும் இல்லை. எமது பிரதிநிதிகளே இவ்வாறு இருப்பதன் காரணமாகவே அரசாங்கத்தில் உள்ளவர்களும் வடக்கு மீனவர் பிரச்சினையில் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயற்பட்டுவருதற்கு காரணமாக அமைகிறது.

சங்கங்களை சமாசத்தினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது. இதுதான் இன்று வடக்கு மீனவர்களாகிய எமது நிலை. எம்மிடையே உள்ள ஒற்றுமையீனமே இதற்கு காரணம். உடனடியாக மீனவர் சமுதாயம் விழிப்படைந்து ஒன்றுபட்டு தீவிரமாக போராட முன்வர வேண்டும். இல்லாவிடில் கடல் வளம் அழிக்கப்பட்டு எமது வாழ்வாதாரமும் இல்லாமல் போகும்."– என்றார்.

# அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் கேரளக் கஞ்சாவுடன் தம்பதி கைது!

(றிபாஸ்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத் தில் கேரளக் கஞ்சாவுடன் கணவனும், மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய சப் இன்ஸ்பெக்டர் ஆப்தீன் தலைமை யிலான பொலிஸ் குழுவினர் அந்தப் பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபர் களைக் கைது செய்தனர். அவர்களிட மிருந்த 9 கிராமும் 610 மில்லிகிராம் கஞ்சாவையும், இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத் தில் நேற்று ஆஜர்படுத்திய போது அவர் களை நவம்பர் 10ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தர விட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப் பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கற்பிட்டி துடாவக் கடல் பகுதியில் கைவிடப்பட்ட 956 கிலோ பீடி இலைகளுடன் டிங்கி படகு மீட்பு







(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

இலங்கை கடற்படையினர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை கற்பிட்டி துடாவ கடற்கரை மற்றும் கடல் பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கை யின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் 956 கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் ஒரு டிங்கி படகு ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

துடாவ கடற்கரை மற்றும் கடல் பகு தியில் இலங்கைக் கடற்படை கப்பல் விஜய நடத்திய இந்த சிறப்பு தேடு தல் நடவடிக்கையின் போது, கடலில் மிதக்கும் பத்து (10) படகுகள் மற்றும் அந்த கடலோரப் பகுதியில் ஒரு சந் தேகத்திற்கிடமான டிங்கி படகு ஆகி யவை கண்காணிக்கப்பட்டு ஆய்வு செய் யப்பட்டன.

அந்த நேரத்தில், கடற்படையினரின் நடவடிக்கைகளின் காரணமாக கரைக்கு கொண்டு வர முடியாததால், கடலிலும் கடலோரப் பகுதியிலும் கடத்தல்காரர்க ளால் கைவிடப்பட்ட 956 கிலோகிராம் பீடி இலைகள் மற்றும் ஒரு டிங்கி படகு ஆகியவற்றைக் கடற்படையினர் கைப் பற்றினர்.

அவை மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக புத்தளம் கலால் அலு வலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.



# போதைப் பொருள்களின் ஒழிப்புக்கான தேசிய வேலைத்திட்டத்துக்கு வரவேற்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

அண்மைக் காலமாக நாட்டை உலுக்கும் போதைப்பொருள் பாவனையை இல்லாது ஒழிக்க அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள தேசிய வேலைத் திட்டத்தை வரவேற்பதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்திய லிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப் பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:-

நாளை 30 ஆம் திகதி வியாழக் கிழமை ஜனாதிபதி தலைமையில் ஆரம் பிக்கப்படவுள்ள போதை ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டமானது அரசியல் வேறு பாடுகளுக்கு அப்பால் வரவேற்கப்பட வேண்டியதாகும். மூன்று தசாப்தகாலம் இந்த நாடு உள்நாட்டு யுத்தத்தினால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட நிலை யில் நாட்டின் பொருளாதாரமும் மிக மோசமான நிலைமையை அடைந்தது. இவற்றிலிருந்து நாடு படிப்படியாக மீண்டுவரும் நிலையில் போதைப் பொருள் பாவனை நாட்டின் அனைத் துப்பகுதியிலும் பரவியுள்ளமை எதிர் கால சந்ததியை ஆபத்தான சூழ்நிலைக் குள் வீழ்த்தும் அபாய நிலையை தோற்று வித்துள்ளது. விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் வடக்கு, கிழக்கு பிர தேசங்கள் போதைப்பொருள் அற்ற தேசமாக இருந்தது. எனினும் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுறுத்தப்பட்ட தன் பின்னர் அரச இயந்திரத்தின் உதவி யுடன் நன்கு திட்டமிட்ட வகையில் வடக்கு, கிழக்கு இளைஞர் யுவதிகள் குறி வைக்கப்பட்டு போதைப்பொருள் பாவனை ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. இது தமிழ் சமூகம் எதிர்நோக்கும் பாரிய சவாலாகும்.

அந்த வகையில் இந்த அரசாங் கமானது தேசிய, பிராந்திய, மாவட்ட மட்டங்களில் குழுக்களை அமைத்து போதை ஒழிப்பு தேசிய வேலைத்திட் டத்தை ஆரம்பிப்பது என்பது இனமத வேறுபாடுகளைக் கடந்து வரவேற்கப் படவேண்டியதொன்றாகும்.

அதேவேளை இந்த நாட்டு மக்க ளும் போதை ஒழிப்பு நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி எதிர்கால சந்ததியை பாரிய அழிவிலிருந்து காப் பாற்றும் வேலைத்திட்டத்தில் பங்கா ளிகளாக வேண்டும். - என்று குறிப்பி டப்பட்டுள்ளது.

# வவுனியாவில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் கைது

(கி.வசந்தன்)

வவுனியா நகரப் பகுதியில் ஐஸ்போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸெ நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவ லையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனையில் தலைமைப் பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொறுப் பதிகாரி றிஸ்னி தலைமையில் பொலிஸார் வவுனியா நக ரப் பகுதியில் விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொண் டனர்.

இதன்போது, 15 கிராம் ஐஸ் போதைப் பொருளை உடை மையில வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைது செய்யபபட் டார். அவரிடம் இருந்து ஐஸ் போதைப் பொருளும் மீட் கப்பட்டது.



கைது செய்யப்பட்டவர் மன்னார் பகுதியைச் சோந்த 23 வயதுடைய இளைஞராவார். மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவ டிக்கை எடுத்துள்ளனர்.




# ஆசிரியர்களாக பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பில்

(வாலகிருஸ்ணா)

ஆசிரியர்களாகப் பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் முதல் பாடசாலையில் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என அகில இலங்கை பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் த.அனிரன் தெரிவித்தார்.

தமது நியாயமான கோரிக்கையை அரசாங்கம் ஏற்று தமக்கான தீர்வை வழங்க முன்வரவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

நேற்றுப் பிற்பகல் மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போத. அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டு ஆசிரியர் பணியாற்றிக் கொண்டு வருபவர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதி தொடர்பில் கடந்த ஐந்து வருடங்களாக பட்டதாரிகள் ஒன்றியம் சார்பில் தொடர்ச்சியாகப் போராட்டங்களும், ஊடக சந்திப்புகளும் நடத்தி வருகின்றோம்.

வழங்கப்பட்டுள்ள நியமனம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். ஆனால் செயற்பாடுகள் ஆசிரியர்கள். இவர்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குரிய சலுகைகளும் கிடைப்பதில்லை, ஆசிரியர் பணியினை ஆற்றுகின்ற போதும் ஆசிரியர்களுக்கான சலுகைகளும் இவர்களுக்கு இல்லை. எனவே இரண்டுமே இல்லாத நிலையில் இவர்களது நியமனம் இருக்கின்றன.

தற்போது கடந்த வாரம் எமது நாட்டின் பிரதமர் நாட்டிலே முப்பத்தாறாயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் இருக்கின்றன எனக் கூறியிருந்தார். ஆனால் இந்த வெற்றிடங்கள் இருப்பதற்கான வெளிப்படுத்துகைகள் பாடசாலைகளில் இருந்து கிடைக்கப்படவில்லை. ஏனெனில் ஆசிரியர்களாகச் சேவை புரிகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான கணக்கெடுப்புகளை இவர்கள் பார்ப்பதில்லை. இது தொடர்பில் கல்வி அமைச்சர் கூட நாடாளுமன்றத்தில் தெரிவிப்பதில்லை. காரணம் நாடளாவிய ரீதியில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை ஆசிரியர்களாக இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மறைமுகமாக நிரப்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இருப்பு என்ன? இவர்கள் பாடசாலைகளில் இருந்து விடுபடுவார்களாக இருந்தால் வலயங்களில் மாத்திரமல்லாமல் பாடசாலைகளிலும் எவ்வாறான சிக்கல்கள் ஏற்படும் என்பதை இனங்காட்டும் முகமாக நாங்கள் நேற்றைய தினத்தில் இருந்து நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தைப் பொருத்தமட்டில் கல்குடா, மண்முனை மேற்கு, பட்டிருப்பு போன்ற கல்வி வலயங்களில் பல காலமாக ஆசிரியர்கள் இல்லாமல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களே அந்தப் பணிகளை முன்னெடுத்திருந்தார்கள். நேற்றும் இன்றும் (திங்களும் செவ்வாயும்) எங்களுடைய பணிப் பகிஸ்கரிப்பு இடம்பெற்று வருவதால் பல பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

இதனை எமது பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நாங்கள் பாடசாலைகள், வலயங்கள், ஆசிரியர் அதிபர்ளுடனான பிரச்சினைகள் காரணமாக இதனை மேற்கொள்ளவில்லை. நாங்கள் எமது தொழிலுரிமையை நிலைநாட்டுவதற்கான ஒரு வழிமுறையாகவே இதனைக் கையாளுகின்றோம்.

ஒரு நிரந்தர ஆசிரியர்களுக்கு ஒரு பாடசாலையில் எவ்வாறான பணிகள், நேரசூசிகள் வழங்கப்படுகின்றனவோ அதே விதமான விடயங்களே ஆசிரியர்களாக இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களை விடுத்து, அவர்கள் கற்றல் - கற்பித்தலில் இருந்து விலகி அலுவலகத்தில் ஆவணக் கோவைகளைச் செய்யும் அலுவலர்களாகவே நேற்றும் இன்றும் தங்கள் கடமைகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் சம்பள அதிகரிப்புக்காகவோ, மேலதிக சலுகைகளுக்காகவோ போராடவில்லை. ஐந்து வருடங்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருக்கின்றோம், ஆசிரியர் பணியினை ஆற்றிக் கொண்டு வருகின்றோம். ஆனால் இந்த அரசாங்கங்கள் எதுவும் எமது நியமனம் தொடர்பில் இதுவரை எவ்வித ஏற்பாடுகளையும் செய்யவில்லை.

எங்களது போராட்டங்களின் பிரதான நோக்கம் ஐந்து வருடங்களாக ஆசிரியர் பணியினை மேற்கொள்ளும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஆற்றிய ஐந்து வருட சேவையினை ஆசிரியர் பயிற்சியாகக் கொண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தில் இருந்து அவர்களுக்கு ஆசிரியராக நிமயனம் வழங்க வேண்டும் என்பதே.

எமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் சில பாடசாலை அதிபர்கள் சில வற்புறுத்தல்களை விடுக்கின்றார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கின்றோம். இது எமது தொழிற்சங்க நடவடிக்கை. இதில் தலையீடுகள், அச்சுறுத்தல்கள் தேவையற்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பார்களாக இருந்தால் எமது தொழிற்சங்கப் பேராட்டம் வேறொரு வடிவில் இந்த நாட்டைப் புரட்டிப் போடும் விதமாக அமையும் என்பதையும் தொழிற்சங்கம் சார்ந்து நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். - என்று தெரிவித்தார்.



# மட்டு. எழுவான்கரைப் பகுதிக்குள் ஊடுருவியுள்ள காட்டுயானைகளை 2 நாள்களில் விரட்ட முயற்சி

## வனஜீவராசிகள் திணைக்களம் – ராணுவம் இணைந்து நடவடிக்கை என்கின்றார் மாவட்ட எம்.பி. சாணக்கியன்



(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எழுவான் கரை பகுதிக்குள் ஊடுருவியுள்ள காட்டு யானைகளை இரண்டு தினங்களில் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களம், இராணுவத்தினர் இணைந்து இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் இலங்கைத் தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எழுவான் கரை பகுதியில் சில வாரங்களாக தொடரும் காட்டு யானை அட்டகாசத்தினை கட்டுப்படுத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் நேற்று மாலை மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஏற்பாடு செய்த இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர் தெட்சணாகௌரி தினேஷ், பிரதேச சபை தவிசாளர் செந்தில்குமார், வனவிலங்கு திணைக்கள அதிகாரி சுரேஷ் மற்றும் குருக்கள்மடம் இராணுவ முகாம் தளபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கடந்த சில வாரங்களாக மண்முனைப் பற்று பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பாலமுனை, தாழங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம் ஆகிய பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் மற்றும் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றைக் கட்டுப்படுத்த எவ்வாறான வழிமுறைகளை கையாள வேண்டும் என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

இதேபோன்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிகுடி ஆகிய பகுதிகளில் புகுந்துள்ள காட்டுயானைகள் தொடர்பிலும் அவற்றினை வெளியேற்றுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சாணக்கியன் எம்பி. –

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கின்ற இந்த தருணத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பது வழமையான ஒரு விடயம். ஆனால் இப்போது வழமைக்கு மாறாக நகர் பகுதிகளிலும் – குறிப்பாக மண்முனைப் பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலும் மற்றும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவிலும் உள்ள பகுதிகளிலும் கடந்த வாரமாக யானைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த வாரம் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற அமர்வு நிறைவு பெற்றதன் பின்னர் அமைச்சரிடம் இவை தொடர்பாக பல கோரிக்கைகளை முன் வைத்திருக்கின்றோம்.

வனவிலங்கு துறையினரிடம் நாங்கள் இது தொடர்பாக பேசிய போது அவர்கள் தாங்கள் பணி புரிவது வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கே எனவும் யானைகளிடமிருந்து மக்களை பாதுகாப்பதற்கான பொறிமுறை தங்களுக்கு இல்லை எனவும் தெரிவித்திருந்தனர். இந்த விடயங்கள் தொடர்பாக கடந்த வாரம் அமைச்சரிடம் பேசி இருந்தோம்.

குறிப்பாக இந்தவனவிலங்குதிணைக்களத்தில் அதிகளவான அலுவலகங்களை அமைக்க வேண்டும். அத்தோடு திணைக்களத்திற்கான ஊழியர்களையும் அதிகரிக்க வேண்டும் எனஜ் கோரிக்கையை முன் வைத்திருக்கின்றோம். இருப்பினும் வனவிலங்கு துறைக்கான அமைச்சர் மாவட்டத்திற்கு விஜயம் செய்து ஆறு மாதங்கள் கடந்தும் நியமிப்போம் என கூறியவர்களை இன்னுமும் நியமிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வனவிலங்கு திணைக்களத்தில் யானை – மனித மோதலைக் கட்டுப்படுத்துவதற்கு ஐந்து ஊழியர்கள் மாத்திரமே காணப்படுகின்றனர். ஆகவே இந்த விடயத்தில் எவராவது ஒருவரின் உயிரிழப்பு இடம்பெற்றதன் பின்னர் இந்த விடயத்தை பற்றி பேசுவதோ அல்லது கூட்டங்கள் நடத்துவதோ பிரயோசனம் இல்லாத ஒரு விடயம். இவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெற முன்னர் அதனை நாங்கள் தடுக்க வேண்டும்.

எனவே இந்தப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஐந்து ஊழியர்களை மாத்திரம் கொண்டு இந்த வேலைகளை முன்னெடுக்க முடியாது என்பதனால் எமக்கு ஓர் ஆலோசனை கிடைக்கப்பெற்று இருக்கிறது. அந்த வகையில் கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி, மட்டக்களப்புக்குப் பொறுப்பான கட்டளை தளபதி, குருக்கள்மடம் இராணுவ முகாமிற்கு பொறுப்பான அதிகாரி. ஆகியோருடன் கலந்துரையாடி, இன்று இரவு முதல் அவசரமாக இராணுவத்தின் ஒத்துழைப்புடன் இந்த யானைகள் பகல் நேரங்களில் எந்தப் பகுதியில் இருக்கின்றது என்பதனை கண்காணிப்பதற்கும் அதனை இப்பகுதியில் இருந்தே வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் கோரியுள்ளேன்.

இன்றில் இருந்து இரண்டு நாள்களுக்குள் இந்த யானைகள் எப்பகுதியில் இருக்கின்றன என்பதனை உடனடியாக பிரதேச சபைத் தவிசாளருக்கோ அல்லது எனக்கோ அல்லது வனவிலங்கு திணைக்களத்தினருக்கோ தொலைபேசி அழைப்பின் ஊடாக தெரியப்படுத்தினால் நாங்கள் உடனடியாக இராணுவத்தினருக்கும் தெரிவித்து அவற்றுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். – என்றார்.

# தி.மு.க. இந்த மண்ணில் இருக்கும் வரை பா.ஜ.கவின் பகல் கனவு நிறைவேறாது

## முதல்வர் ஸ்டாலின் சூளுரை



“2026 இல் நடக்க இருக்கும் தேர்தல் தனித் தன்மையோடு தலைநிமிர்ந்து நிற்கும் தி.மு.க. ஆட்சியா அல்லது டில்லிக்கு வளைந்து கொடுக்கும் அடிமைகளின் ஆட்சியா என தீர்மானிக்கும் தேர்தல்.”

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

திமுக நிர்வாகிகளுக்கான “என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டத்தில் அக்கட்சித் தலைவர் ஸ்டாலின் மேலும் உரையாற்றுகையில்,

“உங்களுடைய உழைப்பால், ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாம், அடுத்து ஏழாவது முறையும் ஆட்சி அமைக்க வேண்டும். அதற்குத் தான் இந்தப் பயிற்சிக் கூட்டம். அதிலும், 2019ஆம் ஆண்டு முதல், நாம் எதிர்கொண்ட அத்தனை தேர்தல்களிலும், மகத்தான வெற்றிகளை பெற்று வருகிறோம். நம்முடைய வெற்றிகள், நம்முடைய எதிரிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 2026 தேர்தலிலும் நாம்தான் வெற்றிபெற போகிறோம். அன்றைக்கு தலைப்புச் செய்தி என்ன என்றால், “திராவிட மொடல் 2.0 ஆட்சி தொடங்கியது” தமிழ்நாட்டு மக்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையில் சொல்கிறேன்.

திராவிட மொடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும், கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் சென்று சேர்ந்திருக்கிறது. லட்சக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்றத்தையும் தொழில் துறையில் மிகப்பெரிய பாய்ச்சலையும். இந்தியாவில் எந்த மாநில அரசும் நம்முடைய அளவிற்கு சாதனைகள் செய்திருக்க மாட்டார்கள். மீதமிருக்கும் சில வாக்குறுதிகளையும் நிச்சயம் நிறைவேற்றித் தருவோம். நம்முடைய அரசு செய்த சாதனைகளால் தான் நம்மால் தைரியமாக அனைவர் வீட்டுற்கும் சென்று, ஆதரவு கேட்க முடிகிறது.

மத்திய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு செய்து கொண்டிருக்கும் துரோகங்களை, நிதி ஒதுக்கீடுகளில் செய்து கொண்டிருக்கும் வஞ்சகங்களை எடுத்துச் சொல்லி, ‘தமிழ்நாடு போராடும் – தமிழ்நாடு வெல்லும்’ என்று தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, இந்த மாபெரும் முன்னெடுப்பை வெற்றியடைய வைத்த, தி.மு.க. தொண்டர்களுக்கு, இந்த மேடையில் இருந்து, என்னுடைய பாராட்டுகளை, சல்யூட் மூலமாக சொல்லிக் கொள்கிறேன்.

2026 இல் நடக்க இருக்கும் ஜனநாயகத் தேர்தல், தமிழ்நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தல். தனித் தன்மையோடு தலைநிமிர்ந்து நிற்கும் நம்முடைய ஆட்சியா? டில்லிக்கு வளைந்து கொடுக்கும் அடிமைகளின் ஆட்சியா? என்று தீர்மானிக்கும் தேர்தல். தமிழ்நாட்டின் சுய மரியாதையையும் தனித்தன்மையையும் காப்பாற்றப் போகும் தேர்தல்.” என்று தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளிடம் நெல் கொள்வனவை உரிய நேரத்தில் மேற்கொள்ளாதது ஏன்?

## தமிழக அரசிடம் விஜய் கேள்வி



விவசாயிகள் கஷ்டப்பட்டு உழைத்து விளைவித்த நெல்லை உரிய நேரத்தில், உரிய விலைகொடுத்து கொள்முதல் செய்யாமல் அவர்களின் வாழ்வாதாரத்தை வீணாக்கியதன் கரணம் என்ன என்று தமிழக அரசிடம் த.வெ.க. தலைவர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஒரு மாத காலமாக எந்தவித அரசியல் நகர்வுகளிலும் ஈடுபடாமல் இருந்த விஜய், நேற்று நெல் கொள்முதல் விவகாரம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். ஏற்கெனவே தனது பிரச்சாரங்களில் தி.மு.கவை விமர்சித்த விஜய், ஒரு மாதம் கழித்து வெளியிட்ட அறிக்கையிலும் தி.மு.கவையே கடுமையாக விமர்சித்துள்ளார்.

நெல் கொள்முதல் விவகாரம் தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தொடர் மழையால், விவசாயிகளின் கடின உழைப்பால் விளைவிக்கப்பட்ட நெல்மணிகள் முதல்முறை வீணான போதே துரிதமாகச் செயல்பட்டு மீதமுள்ள நெல்மணிகளைப் தமிழக அரசு பாதுகாத்திருக்க வேண்டாமா?

விவசாயிகள் மீது உண்மையாகவே அக்கறை கொண்டிருக்கும் அரசு என்றால் அது அவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்து, பொருளாதார ரீதியில் அவர்கள் உயர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசாக இருக்க வேண்டும். மாறாக, ஏழை விவசாயிகள் தங்களின் கடின உழைப்பின் வாயிலாக விளைவித்தவற்றை உரிய நேரத்தில் கொள்முதல் செய்யாமல் அவற்றை மழையில் நனையவிட்டு வீணாக்கி, ஏழை விவசாயிகளின் வயிறில் அடிக்கும் ஒரு அரசை என்னவென்று சொல்வது?

ஏழை விவசாயிகள் தாங்கள் காலங்காலமாகச் செய்து வரும் உழவுத் தொழில் மூலமே விளைவித்த பொருள்களை விற்று அதைப் பணமாக்கித் தங்களின் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அவர்கள் பொருளாதார ரீதியில் வலுவடைய வேண்டும் என்றால் அதற்கு முழு மூலதனம் என்பது விவசாயமும் அதற்கான உழைப்பும் மட்டுமே.

ஆனால் விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருள்களை விற்று, பணத்தைக் கையில் பார்த்துவிடாமல் தடுப்பதே ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசின் நோக்கமாக இருந்து வருகிறதா என்கிற ஐயம் ஏற்படுகிறது. இது இந்த ஆண்டு மட்டுமில்லை. ஒவ்வோர் ஆண்டுமே இதுதான் நிலைஎன்கிற போது வேதனையாகவும் உள்ளது.

வடகிழக்கு பருவமழைக் காலம் இன்னும் நீடிக்க உள்ளது. எனவே இனியேனும் ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்தி, இனி வரும் மழையினால் நெல் உள்ளிட்ட பயிர்கள் வீணாகாமல் தடுக்க வேண்டும்.

அத்தோடு பருவமழையின் தாக்கத்திலிருந்து மக்களைக் காக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விளம்பர செயல்பாடுகளாக இன்றி போர்க்கால அடிப்படையில் உண்மையாகவே மேற்கொள்ள வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.




# வியட்நாமில் மழை வெள்ளம் பண்டைய தளங்கள் மூழ்கின

வியட்நாமின் மத்திய மாகாணத்தில் பெய்து வரும் வரலாறு காணாத கன மழை காரணமாக ஆயிரக்கணக்கான வீடுகளும், வரலாற்றுச் சிறப்புமிக்க பழங்காலத் தளங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வானிலை ஆய்வாளர்களின் கூற்றுப்படி, கடந்த 27 ஆம் திகதி இரவு வரையான 24 மணி நேரத்தில் வியட்நாமில் வரலாற்றில் முதல்முறையாக சுமார் 1,085.8 சென்ரி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

யுனெஸ்கோவால் பட்டியலிடப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஹோய் நகரிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் படகுகள் மூலம் மீட்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

வியட்நாமின்வடக்கேஉள்ளஹனோய் மற்றும் தெற்கே உள்ள ஹோ சி மின் ஆகிய நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.



இதனால், ஆயிரக்கணக்கான பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.





# காசா மீது உடனடி சக்திவாய்ந்த தாக்குதல்; இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உத்தரவு

ஹமாஸ் படையினரின் போர் நிறுத்த ஒப்பந்த விதிமீறலுக்கு பதிலடியாக காசா மீது சக்திவாய்ந்த தாக்குதல் நடத்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உத்தரவிட்டுள்ளார்.

தெற்கு காசாவில் தங்கள் படைகள் மீது ஹமாஸ் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றத்தின் எதிரொலியாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

“பாதுகாப்பு ஆலோசனைகளைத் தொடர்ந்து, காசா பகுதியில் உடனடியாக பலத்த தாக்குதல்களை நடத்துமாறு பிரதமர் நெதன்யாகு இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளா.ர்.” என்று கூறப்பட்டுள்ளது.

இன்னொருபுறம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் படைகளால் மீட்கப்பட்ட ஒரு பணயக்கைதியின் உடல் பாகங்களை ஹமாஸ் முன்னதாக ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றம்சாட்டியது. இது போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அப்பட்டமான விதிமீறல் என்று நெதன்யாகு கண்டனம் தெரிவித்திருந்தார்.

நெதன்யாகுவின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சில நிமிடங்களில், நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மற்றொரு பணயக்கைதியின் உடலை ஒப்படைக்கும் திட்டத்தை ஒத்திவைப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.







# இன்றைய ராசி பலன்கள் -29.10.2025




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.




இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சிவசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப் படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்து கொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.




நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப் படி செய்தால் குறித்தநேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது.




உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.




முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம். பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.




உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையை புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் – மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -29.10.2025




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்திற்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்கு களை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதி காரிகள் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யம் அளவுக்குப் பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.




இன்று அமைதியாகவும் பொறு மையாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணிகளை கவன மாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காண லாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவி டுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப்பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரியங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன் றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் பணியில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுது போக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறையில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று கவனமாகவும் சாமார்த் தியமாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேர லாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரி களின் பாராட்டைப் பெரும் அளவிற்கு இருக் காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும். உங்கள் பணிகளின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள் ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதார ணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

# சம்பியனாகியது யாழ் இந்துக் கல்லூரி!



வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூ ரியால் நடாத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி யாழ்ப்பாண கல்லூரியின் கூடைப் பந்தாட்ட திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ் இந்துக் கல் லூரி களமாடியது.

விறுவிறுப்பாக மேலதிக நேரம் வரை சென்ற இப்போட்டியில் 59 : 56 என்ற புள்ளிக்கணக்கில் யாழ் இந்துக் கல் லூரி வெற்றியைப் பதிவு செய்து தொட ரின் சம்பியனாகியது.